| | | |
|---|---|---|
| | மாகாணக் கல்வித் திணைக்களம்<br>வடக்கு மாகாணம்<br>**இரண்டாம் தவணைப்பரீட்சை - 2023** | |

| | | |
|---|---|---|
| தரம் - **11** | **குடியியற் கல்வி** | மூன்றுமணித்தியாலங்கள் |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

வினாப் பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையதைத் தெரிவு செய்து ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைப் புள்ளடித்தாளில் இடுக.**

1. மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அவர்கள் மூலம் நாட்டின் ஆட்சி செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவது
   (1) மன்னராட்சி முறை (2) நேரடி ஜனநாயக ஆட்சி முறை
   (3) மறைமுக ஜனநாயக ஆட்சி முறை (4) இராணுவ ஆட்சி முறை

2. "மக்கள் அனைவரும் நாட்டின் ஓரிடத்தில் ஒன்று கூடி நேரடியாகவும், விரைவாகவும் அரசாட்சி நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடி அவர்களின் விருப்பத்துக்கமைய தீர்மானம் எடுக்கும் முறை ஜனநாயகம்" எனக் கூறியவர்
   (1) சீலர் (2) காணர் (3) ஆபிரகாம்லிங்கன் (4) லியர்

3. ஐரோப்பாவில் நிலமானிய சமுதாய அமைப்பு முறை நிலவியதாகக் கருதப்படும் காலப்பகுதி
   (1) கி. மு. 5 - 15 நூற்றாண்டு (2) கி. மு. 1 - 15 நூற்றாண்டு
   (3) கி. பி. 5 - 15 நூற்றாண்டு (4) கி. பி. 1 - 15 நூற்றாண்டு

4. 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மனித உரிமைப் பிரகடனத்தை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு எது?
   (1) பாதுகாப்பு சபை (2) பொதுச் சபை
   (3) செயலகம் (4) சர்வதேச நீதிமன்றம்

5. நீதித்துறையின் அதிகாரங்களில் ஒன்றாக அமைவது
   (1) சட்டத்துக்கு விளக்கமளித்தல்
   (2) சட்ட நிரூபண சபையாகச் செயற்படல்
   (3) சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
   (4) நிதிக்கட்டுப்பாடு

6. இலங்கையில் இரண்டு சபைகளைக் கொண்ட பாராளுமன்றத்தை அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு சீர்திருத்தம் எது?
   (1) கோல்புறூக் கமரன் அரசியல் யாப்பு சீர்திருத்தம் (2) சோல்பரி அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (3) டொன்மூர் அரசியல் யாப்பு சீர்திருத்தம் (4) மனிங் அரசியல் யாப்பு சீர்திருத்தம்

7. சமஷ்டி ஆட்சிமுறையில் பிராந்திய அலகுகள் அழைக்கப்படுவது

(1) மாநிலம் (2) மாவட்டம் (3) மகாணம் (4) உள்ளூராட்சிமன்று

8. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி காலத்தில் முதன் முதலாக கொண்டுவரப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் முயற்சியாக கருதப்படுவது

(1) கிராமசபை கட்டளைச் சட்டம்

(2) மாநகரசபை கட்டளைச் சட்டம்

(3) உள்ளூராட்சிமன்ற கட்டளைச் சட்டம்

(4) அரசியல் அதிகாரசபைச் சட்டம்

9. மாகாணசபை ஆளுநர் பதவி

(1) சபாநாயகரால் வழங்கப்படுகின்றது.

(2) மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றது

(3) ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றது.

(4) முதலமைச்சரால் நியமிக்கப்படுகின்றது.

10. சட்டத்துறையிலிருந்து தெரிவு செய்யப்படும் நிறைவேற்றுத் துறையை கொண்ட அரசியல் முறை

(1) பாராளுமன்ற அரசாங்க முறை

(2) ஜனாதிபதி அரசாங்க முறை

(3) அனைத்தாண்மை அரசாங்க முறை

(4) சர்வாதிகார அரசாங்க முறை

11. இலங்கையில் பன்மைப் பண்பாட்டு சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய குடிப்பெயர்வுக் காரணி

(1) பண்டு பரிந்த குழுவினர் வருகை

(2) தோட்டத் தொழிலாளர் வருகை

(3) பத்தகச்சனா சகோதரர்கள் அடங்கிய குழுவினர் வருகை

(4) வர்த்தகக் குழுக்களின் வருகை

12. பின்வருவனவற்றில் இடைநிலை பொருளாக அமைவது

(1) பசளை (2) கட்டடங்கள் (3) இயந்திரங்கள் (4) நிலம்

13. ஜனாதிபதி தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரமுடைய நீதிமன்றம்

(1) உயர் நீதிமன்றம் (2) மேல் நீதிமன்றம்

(3) மேன்முறையீட்டு நீதிமன்றம் (4) மாவட்ட நீதிமன்றம்

14. அரசியல் மற்றும் சமூக, பொருளாதார ரீதியில் நிலவும் கருத்து வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டு எழும் மோதல்

(1) நுண்மையான மோதல் (2) கொள்கை ரீதியான மோதல்

(3) வெளிப்படையான மோதல் (4) உள்ளக மோதல்

15. சந்தைப் பொருளாதார முறையின் அடிப்படைப் பண்பாக அமைவது,
   (1) மத்திய திட்டமிடல் சபையின் மூலம் பொருளாதாரம் நிர்வகிக்கப்படல்
   (2) அரச நிறுவனங்கள் அதிகமாகக் காணப்படல்
   (3) தனியார் சொத்துடமைக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டிருத்தல்
   (4) சந்தை தொடர்பான சட்டதிட்டங்கள் வலுவானதாக இருத்தல்.

16. கொலை, கொள்ளை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவை தொடர்பாகப் பயன்படுத்தப்படும் சட்டம்
   (1) அரசியல் யாப்புச் சட்டம்
   (2) குடியியல் சட்டம்
   (3) குற்றவியல் சட்டம்
   (4) தேசவழமைச் சட்டம்

17. பன்மைப் பண்பாட்டு சமூகத்தைப் பயனுடையதாக்கிக் கொள்ள "வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தல்" என்பதனை இலக்காகக் கொண்டு செயற்படுகின்ற நாடுகள் உள்ளடங்கிய விடைத் தொகுதி
   (1) இலங்கை, சிங்கப்பூர்
   (2) சிங்கப்பூர், சுவிற்சர்லாந்து
   (3) இந்தியா, சீனா
   (4) நேபாளம், இந்தியா

18. ஒரு நாட்டின் அடிப்படை சட்டமானது அந்த நாட்டின்
   (1) விசேட சட்டம்
   (2) குடியியல் சட்டம்
   (3) பொதுச் சட்டம்
   (4) அரசியல் யாப்புச் சட்டம்

19. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA) யின் நோக்கம்
   (1) சுதந்திர வர்த்தகத்தை மேற்கொள்ளல்
   (2) சமநிலை அபிவிருத்தியை ஏற்படுத்தல்
   (3) பிராந்திய வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தல்
   (4) அரச மற்றும் அரசசார்பற்ற மக்களை ஊக்குவித்தல்

20. இலங்கையில் இறுதி நியாயாதிக்கமுள்ள நீதிமன்றம்
   (1) உயர் நீதிமன்றம்
   (2) மேல் நீதிமன்றம்
   (3) மேன்முறையீட்டு நீதிமன்றம்
   (4) மாவட்ட நீதிமன்றம்

21. நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் பதவியை இலங்கையில் அறிமுகம் செய்த அரசியல் யாப்பு சீர்திருத்தம் எது?
   (1) டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (2) சோல்பரி அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (3) முதலாம் குடியரசு அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (4) இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு சீர்திருத்தம்

22. மனித செயற்பாடு காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி
   (1) வறட்சி, காட்டுத் தீ, மண்சரிவு
   (2) அமிலமழை, சுனாமி, சூறாவளி
   (3) சூறாவளி, அமிலமழை, காட்டுத் தீ
   (4) ஓசோன்படை சிதைவடைதல், சுனாமி, சூறாவளி

23. ஊவா மாகாணத்தில் உள்ளடக்கப்படுகின்ற மாவட்டங்களில் ஒன்று

(1) மொனராகலை (2) இரத்தினபுரி (3) மாத்தளை (4) கேகாலை

24. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் கொண்டு வரப்பட்ட நிர்வாக அலகு

(1) இராசரட்டை (2) கோறளை

(3) தக்கிணதேசம் (4) கச்சேரி

25. பின்வருவனவற்றுள் நிறைவேற்றுத் துறையின் அதிகாரம்

(1) நிதிக்கட்டுப்பாடு (2) சட்டமியற்றுதல்

(3) அரசாங்க சேவை நிர்வாகம் (4) நீதி வழங்கல்

26. மனித வரலாற்றில் மனித உரிமைகளை பெற்றுக் கொண்ட முதல் சந்தர்ப்பம்

(1) பிரித்தானிய மக்னா காட்டா உடன்படிக்கை

(2) அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்

(3) பிரான்சியப் புரட்சிப் பிரகடனம்

(4) ரஷ்யப் புரட்சிப் பிரகடனம்

27. இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அத்தண்டனையை நிறைவேற்றுவதற்கு தேவையான சிபாரிசுகளை ஜனாதிபதிக்கு வழங்குபவர்

(1) பிரதம நீதியரசர் (2) ஓம்புட்ஸ்மன்

(3) நீதி அமைச்சர் (4) சட்டமா அதிபர்

28. கீழே "அ" நிரலில் பொருளாதாரம் ஒன்றின் உற்பத்திக் காரணிகளும் "ஆ" நிரலில் அவற்றுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளும் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன. "அ" நிரலுக்கு ஏற்ப "ஆ" நிரலை ஒழுங்குபடுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. நிலம் | A - இலாபம் |
| 2. உழைப்பு | B - வட்டி |
| 3. மூலதனம் | C - கூலி |
| 4. முயற்சி | D - வாடகை |

(1) DBCA (2) DCBA (3) CBAD (4) DABC

29. சர்வதேச மனித உரிமை பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உறுப்புரிமைகளின் எண்ணிக்கை

(1) 10 (2) 20 (3) 30 (4) 40

30. டொனமூர் அரசியல் யாப்பின் மூலம் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தம்

(1) இருசபை கொண்ட பாராளுமன்றம்

(2) சர்வசன வாக்குரிமை

(3) இனவாரிப் பிரதிநிதித்துவம்

(4) ஆளுநர் நாயகம் பதவி

31. மனித உரிமைகளைப் பாதுகாத்தல், சர்வதேச மனித உரிமைகள் மீறப்படும் போது விசாரணை செய்வதற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு

(1) செயலகம் (2) சர்வதேச நீதிமன்றம்

(3) பாதுகாப்புச் சபை (4) பொதுச் சபை

32. சிறுவர் உரிமைப் பிரகடனத்தின் படி சிறுவர் என கருதப்படுபவர்

(1) 16 வயதுக்குட்பட்டவர் (2) 14 வயதுக்குட்பட்டவர்

(3) 18 வயதுக்குட்பட்டவர் (4) 21 வயதுக்குட்பட்டவர்

33. இலங்கையில் வாழும் ஆதிவாசிகள்

(1) வேடுவர் (2) அர்போணியஸ் (3) செவ்விந்தியர் (4) நீக்ரோக்கள்

34. இலங்கையில் முதன் முதல் அடிப்படை உரிமைகளை உள்ளடக்கிய அரசியல் யாப்பு சீர்திருத்தம்

(1) 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு யாப்புச் சீர்திருத்தம்

(2) 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்புச் சீர்திருத்தம்

(3) சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

(4) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

35. பண்டைய கிரேக்கர் சூழலுக்கு வழங்கிய பெயர்

(1) உயிர் சூழல் (2) ஒயிகஸ்ட் (3) சுற்றாடல் (4) ஓசோன்

36. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதகமான விளைவுகளில் ஒன்று

(1) முனைவில் பனிக்கட்டிகள் உருகுதல்

(2) சூழல் வெப்பநிலை குறைவடைதல்

(3) விளைச்சல் அதிகரித்தல்

(4) சனத்தொகை வளர்ச்சி குறைவடைதல்

37. நடுநிலையாளர் ஒருவரின் பணியாக அமைய முடியாதது

(1) மோதல் பற்றி முழுமையான விளக்கத்தைப் பெற்றிருத்தல்

(2) இரு தரப்பினர் மீதும் தமது செல்வாக்கைப் பிரயோகித்தல்

(3) பக்கசார்பற்றவராக இருத்தல்

(4) நெகிழ்ச்சியான தீர்ப்பை பெற்றுக் கொள்ள வழியைத் தேடல்

38. சூழல் உரிமை பற்றிய பிரச்சினைகளின் போது தொடர்பு கொள்ள வேண்டிய நிறுவனம்

(1) மத்திய சுற்றாடல் அதிகார சபை

(2) சுற்றாடல் அமைச்சு

(3) மாவட்ட செயலகம்

(4) வனவினவிலக்கு பாதுகாப்பு திணைக்களம்

39. ஒரு நாடு சட்டத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆட்சி

(1) மன்னராட்சி (2) சர்வாதிகார ஆட்சி

(3) சட்டத்தின் ஆட்சி (4) தனிநபர் ஆட்சி

40. இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்தான பணி அல்லாதது
   (1) பொது நூல் நிலைய வசதிகளை ஏற்படுத்தல்
   (2) பூங்காக்கள், விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல்
   (3) முறையற்ற கட்டடங்களை அகற்றுதல்
   (4) வரவு செலவுத் திட்ட நிர்வாகம், நிதி நிர்வாகத்தை மேற்கொள்ளல்

($40 \times 1 = 40$ புள்ளிகள்)

## பகுதி - II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **2 தொடக்கம் 7 வரையான வினாக்களில் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. (i) ஜனநாயக ஆட்சி முறையின் இரு பிரதான பிரிவுகளைக் குறிப்பிடுக.
   (ii) அரசின் மூலக்கூறுகளில் இரண்டைக் குறிப்பிடுக.
   (iii) தேசிய அரசின் தோற்றத்திற்கு அடிப்படையாக இருந்த சிந்தனையாளர்கள் இருவரையும் குறிப்பிடுக.
   (iv) தற்கால அரசுகளில் செயற்படும் அரசாங்க முறைகளைக் குறிப்பிடுக.
   (v) சட்டத்தின் இரு பிரதான வகைகளையும் குறிப்பிடுக.
   (vi) இலங்கையில் செயற்படும் ஏனைய சட்டங்கள் இரண்டு தருக.
   (vii) தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் நிறைவேற்றிய சட்டங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (viii) சர்வதேச மோதலின் பிரதான இரண்டு வகைகளையும் குறிப்பிடுக.
   (ix) பொருளாதாரத்தில் இடம்பெறும் உற்பத்திகளின் இரண்டு பிரதான துறைகளையும் குறிப்பிடுக.
   (x) ஒம்புட்ஸ்மனின் இரண்டு பிரதான செயற்பாடுகளையும் குறிப்பிடுக.

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

2. "பன்மைப் பண்பாடு சமூகத்தினைக் கொண்ட நாட்டில் ஜனநாயக ஆட்சி நடைபெறும் போது சகலரும் பங்கு கொள்ளக் கூடியதாக இருத்தல் முக்கிய அம்சமாகும்"
   (i) சனநாயக ஆட்சிப் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ii) தேசிய அரசின் பிரதான பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (iii) (a) அரசின் பிரசைகள் மீதான பொறுப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   (b) அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

3. “அரசு சமூக நிறுவனமாவதோடு மனிதர்களின் உயர்வான பொதுநலனுக்காக செயற்படுவதால் இது ஏனைய சமூக நிறுவனங்களை விட உயர்வானது”

(i) சமஷ்டி அரசியல் யாப்பை நடைமுறைப்படுத்தி வருகின்ற நாடுகள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

(ii) இலங்கையில் பண்டைய காலத்தில் அரசின் மத்திய ஆட்சி தவிர அரசாட்சிக்கு உதவும் வகையில் பிரதேச நிர்வாக அலகுகள் சில காணப்பட்டன. அவற்றுள் மூன்றைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) (a) *1978* ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் *13* ஆம் சீர்திருத்தத்தின்படி மாகாணசபை ஒன்றின் அதிகாரங்கள் மூன்று நிரல்களில் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(b) அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. *(02 புள்ளிகள்)*

4. “அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக விளங்கிச் செயற்படல் அவசியமானது”

(i) உற்பத்தி தொடர்பாக பயன்படுத்தப்படும் நுட்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) உலகில் செயற்படும் பிரதான பொருளாதார முறைகள் மூன்றைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) (a) இலங்கையில் காணப்படும் சந்தைப் பொருளதாரத்தின் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(b) அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. *(02 புள்ளிகள்)*

5. “சட்டம் என்பது இறைமையுடைய அரசியல் அதிகாரத்தால் கொடுக்கப்படும் கட்டளையாகும்”

(i) இலங்கையில் செயற்படும் மேல்நிலை நீதிமன்றங்களில் இரண்டைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) சட்டத்தை செயற்படுத்தும் பிரதானிகள் மூவரையும் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) (a) இலங்கையில் நீதிமன்ற அதிகாரத்தை பாதுகாக்க *1978* ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் கொண்டு வரப்பட்ட மூன்று விடயங்களைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(b) அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. *(02 புள்ளிகள்)*

6. “பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் சாதக பாதக விளைவுகள் ஏற்படலாம்.”

   (i) இலங்கையின் அமைவிடம் பன்மைப் பண்பாட்டு சமூகம் உருவாக ஏதுவாகியது என்பதற்கு இரு காரணங்களைப் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

   (ii) ஜொஹான் கல்டுங் குறிப்பிடும் மோதல் முக்கோணத்தின் படி மோதலுக்கான காரணங்கள் மூன்றையும் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

   (iii) (a) மோதல் தீர்வு முறைகளில் மூன்றைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

   (b) அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. *(02 புள்ளிகள்)*

7. “மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவசியமான உரிமைகள் அனைத்தும் மனித உரிமைகள் எனப்படுகின்றது”

   (i) உரிமைகளுடன் தொடர்புடைய செயற்பாடுகள் இரண்டு வகைப்படுகின்றன. அவற்றைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

   (ii) சிறுவர் உரிமை சாசனத்தின்படி சிறுவர் தொடர்பான உரிமைகளை பிரதான நான்கு தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தலாம். அவற்றில் மூன்றைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

   (iii) (a) மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் பிரசையொருவரின் கடமைகள் பொறுப்புக்கள் மூன்று தருக. *(03 புள்ளிகள்)*

   (b) அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. *(02 புள்ளிகள்)*